CHUNDIKULI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA
Y.M.C.A

★ பிரட்மன் சொல்கிறார்

## வடகிழக்கு யுத்த பிரதிபலிப்பு இந்தியாவை ஈடுபடச் செய்கிறது

வடக்கு கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தத்தின் பிரதிபலிப்பு தமிழ்நாட்டிலும் காணப்படுகிறது இலங்கை மீது இந்தியா கரிசனை காட்டுவதற்கு இதுவும் ஒரு காரணமாகிறது இவ்வாறு ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் —04ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை மீதான ஷெல் தாக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் பலி

காரைநகர் கடற்படை தளத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற மோதலில் இராணுவ அதிகாரி ஒருவரும் பலியாகியுள்ளதாக நேற்று இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்ட்டன் வனசிங்க தெரிவித்தார். சில தினங்களுக்கு முன்னர் காரைநகர் நீலங்காடும்பகுதியில் நடைபெற்ற மோதலில் பலியானவர்கள் கெமுனுப் படையின் ...04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு குண்டு வெடிப்பு உல்லாச பயணிகள் வரவுபாதிப்பு

கொழும்பில் கடந்த மாதம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தையடுத்து இங்கு வரும் உல்லாசப் பயணிகளின் வரவு குறைந்துள்ளது என கொழும்பு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. இந்தச்சம்பவத்தை அரசு வடக்கு கிழக்கு பகுதி பிரச்சினையுடன் சம்பந்தப்படுத்தியுள்ளதாலேயே உல்லாசப் பயணிகள் வர அச்சம் அடைந்திருப்பதாகவும் —04ஆம்பக்கம்பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 131 பிரமோதூத பங்குனி 24 ( 07-04-1991 ) ஞாயிறு

## கொழும்பு பயணம் ஆரம்பம்

தடைப்பட்டிருந்த கொழும்பு பயணிகளின் போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம் — 04 ஆம் பக்கம் பார்க்க

## வழக்கம்பரையில் காரைநகர் கிளை

காரைநகர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வலிமேற்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

## தபால்களை தபால் அதிபரே சைக்கிளில் கொண்டு வந்தார்

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் தபாலக எல்லைக்குள் சேகரிக்கப்பட்ட யாழ் மாவட்டத்துக்குரிய தபால்களை நேற்று முன்தினம் முருங்கன் தபாலதிபர் திரு எஸ். தர்மலிங்கம் யாழ் பிரதம தபாலகத்தில் கொண்டுவந்து சேர்த்துள்ளார். இத்தபால்களை தபாலதிபர் 90 மைல் தூரத்திலிருந்து சயிக்கிளில் கொண்டுவந்து சேர்த்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கொண்டுவரப்படாவிடில் இக்கடிதங்கள் யாழ்ப்பாணம் வர பல மாதகாலம் தாமதமாகும் எனவும் இவரது இச்சேவையை தபால் திணைக்கள வட்டாரங்கள் பாராட்டியுள்ளன (33)

# கிழக்கில் புலிகள் தொடுத்த தாக்குதல்

# 13படையினர் பலி!

## குடியேற்ற வாசிகள் நால்வர்

நேற்று முன்தினம் நண்பகல் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் பதின் மூன்று இராணுவத்தினரும் நான்கு சிங்களக் குடியேற்றவாசிகளும் பலியாகியுள்ளனர்

நேற்று முன்தினம் மாலை 2 30மணியளவில் திருகோணமலை மாவட்டம் அலி ஒலுவ முகாமில் இருந்து ட்றக் வண்டியில் ஈச்சிலம்பத்தை முகாமுக்கு சென்ற இராணுவத்தினர் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டது. பூநகர் எனும் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலில் இரு சிப்பாய்களும் நான்கு குடியேற்றவாசிகளும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு திருமலை கரையோரபிரதான வீதியில் சென்ற இராணுவ அணியொன்றை,வாகரையில், விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடாத்தினர். இங்கு நடைபெற்ற கடும் மோதலில் பதினொரு சிப்பாய்கள் பலியாகினர் மேலும் பத்து சிப்பாய்கள் காயமடைந்தனர்.

## வவுனியா மோதலின் போது 5படையினர் பலி என்கிறது அரசு

வவுனியாவில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 5சிப்பாய்கள் பலியானதாகவும் 8பேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. — 04 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய வர்த்தக பேச்சில் வடகிழக்கு யுத்தமும் பிரஸ்தாபிக்கப்படும்

இன்று புதுடில்லி செல்லும் இலங்கை - இந்திய பொருதகே.

## புங்குடுதீவில் குண்டு வீச்சு

நேற்று இரவு ஏழு மணியளவில் புங்குடுதீவில் இரு பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரப் பகுதியில் நடைபெற்ற இத்தாக்குதலில் எ. கே. வின் அம்மா (65), ஐ. பாலசிங்கம் (35) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இவர்களைத் தவிர மேலும் சிலர் காயமடைந்துள்ளதாகவும் சிலர் இரத்தப்பெருக் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பென்சன்,உணவுமுத்திரைகள்,நிவாரணம் வழங்கியதால் யாழ்மாவட்ட பல நோ. கூ. சங்கங்களுக்கு பல கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோ. கூ. சங்கங்கள் பாடசாலை மதிய உணவு முத்திரைக்கும், உணவு முத்திரைக்கும், ஓய்வூதியத்துக்கும் பல கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்று வெளியான செய்திகள் குறித்து இச் சங்கங்களுடன் முரசொலி நிருபர் தொடர்பு கொண்ட போதே இத் தகவல்கள் வெளியாகின.

"யுத்தம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பமானதும் எமது இருப்பில் இருந்த — 04 ஆம் பக்கம் பார்க்க

## இந்து கலாசார அமைச்சை கண்டிக்கு மாற்றக் கோரிக்கை

பல முக்கிய அமைச்சுக்களை அரசாங்கம் நாட்டின் ஏனைய நகரங்களுக்கு மாற்றி வருவதால் இந்து கலாசார அமைச்சையும் மாற்ற வேண்டும் என இந்து சமய பிரமுகர்கள் ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதன்படி இந்த அமைச்சை கண்டி மாநகருக்கு மாற்று மாறும் கோரிக்கை விடப்பட் டுள்ளன. நடாத்தும் கருத்தரங்குகளை ஏனைய பகுதிகளுக்கு மாற்று மாறும் இந்த அமைப்புக்கள் கேட்டுள்ளன. (33)

## போதைவஸ்து கடத்தலுக்கு இலங்கை கேந்திரநிலையம்

உலகின் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இலங் ... இடம்பெற்ற போதைப் பொருள் தடுப்பு மாநாட்டில் ...

## இலங்கை - இந்திய வர்த்தக பேச்சில்
## வடகிழக்கு யுத்தமும் பிரஸ்தாபிக்கப்படும்

இன்று புதுடில்லி செல்லும் பேர்னாட் திஸரட்ன தலைமையிலான இலங்கைத்தூதுக் குழு வடக்குகிழக்கில் நடைபெறும் யுத்தம் குறித்தும் இந்தியத்தலைவர்களுடன் பேசவுள்ளதாக இப்போது தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய பொருளாதார கூட்டுறவை சீராக்கவும், இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சி குறித்தும் ஆராயவே இக்குழுவினர் இந்தியா செல்வதாக முன்னர் குறிப்பிட்டது தெரிந்ததே.

இதே சமயம் இந்தியத் தலைவர்களுடனான பேச்சின் போது இந்திய முதலீடுகளை இலங்கையில் அதிகரிப்பது குறித்து யோசனையை இந்தியா முன்வைக்கவுள்ளது.

### தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்கா

## ஊழல்கள் நிறைந்த ஐ. தே. க. அரசை தோற்கடித்து புதிய அரசு அமைப்போம்

கடந்த பதின்மூன்று வருடகாலமாக எதிர்க்கட்சியினரின் குறைபாடுகளை உபயோகித்துக்கொண்ட ஐக்கியதேசியக் கட்சியின் இன்றைய அரசு பலவகையான ஊழல்கள் மூலமாக ஆட்சியைப் பிடித்துக் கொண்டுள்ளது.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட எம்.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளருமான அனுரா பண்டாரநாயக்கா பதுளைப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

தொடர்ந்துபேசிய அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முழு இலங்கைமக்களின் கருத்துகள் யோசனைகள் ஆராயப்படுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இப்போதைய நிலையில் சகல இடதுசாரிகளுடன் சேர்ந்து ஊழல் நிறைந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை தோல்வியுறச்செய்து சக்தியுள்ள புதிய அரசு ஒன்றை சுதந்திரக்கட்சி அமைக்கவுள்ளது" என்றார்.

## செஞ்சிலுவையின் புதிய பிரதிநிதி யாழ்ப்பாணம் விஜயம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஸ்ரீலங்கா பிரதிநிதியாகப் புதிதாகப் பதவி பெற்ற திரு. பியறிவெற்றாச் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

முன்னர் ஸ்ரீலங்காப் பிரதிநிதியாக இருந்த திரு. பிலிப் கொண்டிசாவும் இவருடன் வந்திருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச்

— 04 ஆம்பக்கம் பார்க்க

கோள் விடுத்துள்ளன.

இதன்படி இந்த அமைச்சை கண்டி மாநகருக்கு மாற்று மாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேசமயம் கொழும்பில் இந்து கலாசார அமைச்சு

## டெங்கு காய்ச்சலும் குடாநாட்டில் பரவுகிறது

யாழ் மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சலும் பரவ ஆரம்பித்துள்ளதாக சுகாதாரப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து இங்கு வருபவர்கள் மூலமாக இந்நோய் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கண்ணோய், மலேரியா, நெருப்புக்காய்ச்சல் என்பனவும் வெளி மாவட்டங்களிலிருந்து குடாநாட்டுக்குள் வருபவர்களினாலேயே பரவுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

## இலங்கை கேந்திரநிலையம்

உலகின் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இலங்கையை தமது முக்கிய கேந்திர நிலையமாகப் பாவிப்பதாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற போதைப் பொருள் தடுப்பு மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச 'மாபியா' போதைக் கடத்தல் அமைப்பு இங்கு வேரூன்றி விட்டது எனவும் பல்வேறு சம்பவங்கள் மூலம் விளக்கப்பட்டது.

இலங்கை அண்டை நாடுகளின் ஒத்துழைப்புடன் இதனைத் தடுக்க வேண்டும் எனவும் இங்கு ஆலோசனை வழங்கப்பட்டது. 74

## உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் ஆதரவு யாருக்கு?

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஈ பி டி.பி ஆதரவு வழங்கப்போவதாக அறிவித்துள்ளது.

ஆனால் தமிழர் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ. பி ஆர் எல் எவ் என்பன எதிர்க்கட்சிக் கூட்டணியுடன் இருந்தாலும் ஐக்கியதேசியக் கட்சிக்கே தமது ஆதரவை அளிக்கப்போவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் அரசுக்கு ஆதரவு அளிக்காவிட்டால் கொழும்பில் தமக்குப் பாதுகாப்பு இருக்காது என்பதாலேயே இவ்வாறு செயற்படவுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. 83

## ஜே. வி. பியினரின் ஆயுதங்கள் அம்பாந்தோட்டையில் மீட்பு

அம்பாந்தோட்டையில் ஜே. வி. பியினரின் முகாம் ஒன்றை கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தின் சூரியவெவா எனும் விவசாயக் கிராமத்திலேயே மேற்படி முகாமை விசேட பொலிஸ் பிரிவு ஒன்று கைப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் முகாமில் இருந்து பெருமளவு இரட்டைக்குழல் துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# 'தமிழ் மாணவர்களின் கல்வியில் புலிகள் தலையிடப் போவதில்லை

'தமிழ் மாணவர்களின் கல்வியில் விடுதலைப் புலிகள் இதுவரை தலையிட்டது கிடையாது - இனியும் தலையிடப்போவதும் இடையாது'.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தென்மராட்சிப் பொறுப்பாளர் த ரஞ்சன், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மாவீரர்களான சப்டன் சிவா, லெப்டினன்ட் குட்டி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் இந்த ஒன்றுகூடலில் நினைவு உரைகள் இடம்பெற்றதை பாராட்டிய இவர் மற்றைய பாடசாலை மாணவர்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கொடிகாமம் கோத்தணி அதிபர் ம. சின்னத்தம்பி, உசன் கொத்தணி அதிபர் த. பேரம்பலம், மன்றப் பொறுப்பாசிரியர் அ அகிலதாஸ் ஆகியோரும் ஒன்றுகூடலில் சிறப்புரைவழங்கினர்.

இதேவேளை உசன் இராமநாதன் மகாவித்தியாலய கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை கனிஷ்ட பிரிவு அதிபர் திருமதி சூசைமரியதாசன் தலைமையில் நடைபெற்றது. (ப-26)

## சுட்டுக்கொலை

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் மட்டக்களப்பி லுள்ள நாளக்குடா எனும் பகுதியில் வைத்து பாலசுந்தரம் ரவீந்திரன் (31) என்பவரை புளொட் இயக்கத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (71)

★ ★ ★

நேற்றுக் காலை அம்பாறை மாவட்டத்திலுள்ள அலிக்கம்பை எனும் இடத்திற்கு விறகு எடுத்துச் சென்ற 5 பொது மக்களை மாந்தோட்டம் முஸ்லீம் ஊர்காவற்படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (71)

மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILk WHITE LIQUID SOAP

All Purpose Dirt Remover

சாதாரண வீட்டுச்சலவைக்கு பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பொலிவிற்கும் ஏற்பஅளவில் மாற்றஞ் செய்யவும்.

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும், மில்க்வைற் விற்பனையாகிறது.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

04014

31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: விண்ணில்:



★ வருடாந்தம் 1000 கோடி ரூபாவும் போதாதாம்

# பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த அரசுக்குப் பல வெளிநாடுகள் நிர்ப்பந்தம்!

வெளிநாடுகளிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக வரவு செலவுத்திட்டத்தில் வருடா வருடம் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கவேண்டிய நிலை இலங்கைக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ளதாக திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை நீண்டகால அடிப்படையில் 1970 காலப்பகுதியில் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் தற்பொழுது வந்து விட்டது எனவும் பல நாடுகள் தமக்குரிய கடன்களை செலுத்துமாறு அரசை நிர்ப்பந்தித்து மேலும் தவணை வழங்க மறுத்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்

கடந்த வருடம் மட்டும் 1000 கோடி ரூபாவை அரசு வெளிநாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவாக செலுத்தியிருந்தது. இந்த வருடமும் இதே தொகையான பணத்தை வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பி வழங்குவதற்கென ஒதுக்க வேண்டியிருக்குமெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தற்பொழுது இலங்கை பெற்று வரும் வரையறையற்ற பெருந்தொகைக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு எதிர்வரும் காலத்தில் வரவு செலவுத்திட்டத்தில் மிகப் பெரும் தொகையை ஒதுக்க வேண்டி வரும் எனவும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## கைலாசபதி அரங்கில் 'கண்டி அரசன்'

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இன்று பி. ப 3. 30 மணிக்கு முத்தமிழ் எழுச்சி விழா இடம்பெறவுள்ளது இவ் விழாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வதுடன் இசை, நடன நிகழ்ச்சிகளுடன், சிறப்பு நிகழ்ச்சியாக 'கண்டி அரசன்' சரித்திர நாடகம் இடம்பெறவுள்ளது.

## வீரமரணம்

கடந்த 4-ம் திகதி மாவிட்டபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் தீபன் (சுப்பிரமணியம் - சுகந்தகுமார் வட்டுக்கோட்டை) வீரமரணம் அடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் தெரிவிக்கின்றனர். (70)

✶ ✶ ✶

நேற்று முன்தினம் காரைநகரில் நடைபெற்ற மோதலில் 2-ம் லெப் இளங்கோ (ரா. சகாதேவன் சரம்பல்தீவு) வீரமரணமடைந்தார். (71)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

மருத்துவபீடம்

## எயிட்ஸ் நோய்க்கு புதிய மருந்து

எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்தக்கூடிய மருந்து ஒன்றை தாம் கண்டுபிடித்துள்ளதாக பல்கேரியா நாட்டு விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். ரியால் என அழைக்கப்படும் இப்புதிய ஊசி மருந்து எயிட்ஸ் வைரஸ்கள் உடலில் பரவுவதை கட்டுப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது

## அநாதரவான படகு

புங்குடுதீவு ஆலடித்திரி கடற்கரை பகுதியில் அநாதரவாக துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பன்னிரண்டு மணியளவில் கரை ஒதுங்கியபடகினை விடுதலைப்புலிகள் மீட்டுள்ளனர். (20)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நித்தம்புகைந்து நுளம்பு, பூச்சி தொல்லையின்றி நிம்மதியாக நித்திரை கொள்ளலாம். எங்கும் விற்பனையாகிறது விலை ரூ 1.50 மட்டுமே. மில்க்வைற் 04027

### சேவை

உங்கள் பெறுமதிமிக்க புத்தகங்கள், கொப்பிகள் மற்றும் உங்கள் தொகுப்புக்கள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைண்டிங்) கட்டிக் கொடுக்கப்படும். நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த சலுகையில் வழங்கப்

## மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த 30, 31 ஆம் திகதிகளில், அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசபிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கோப்பாய் விளையாட்டுத் துறை அதிகாரி வி. வைரமுத்து போட்டியை நெறிப்படுத்தினார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி போதனா ஆசிரியர் திரு. கே. ஜெகநாதன், யாழ்மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எஸ். அண்ணாத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர்;

இப்போட்டியில் 80 புள்ளிகளைப் பெற்ற எவரெஸ்ற் கழகம் முதலாம் இடத்தையும், 69, 49 புள்ளிகளைப் பெற்ற பாரதி, விளையாட்டுக் கழகங்கள் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (16, 33

## பன்றித்தலைச்சி பங்குனி உற்சவம்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம் தற்போது வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த மூன்று திங்கட்கிழமையும் உற்சவம் வெகுசிறப்பாக நடைபெற்றது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெருந் திரளான பக்தர்கள் உற்சவங்களில் கலந்து கொண்டு வருகின்றனர்.

பங்குனி உற்சவ இறுதித் திங்கள் ஆராதனைகள் நாளை திங்கட்கிழமை இடம் பெறவுள்ளன. (ப-32)

உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது!

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் அமைந்திருககின்றது.


சுகாதாரமான சுவையான உணவு வகைகளுக்கும் மற்றும் சிற்றுண்டி ஓடர்களுக்கும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

தித்திப்பான உணவுப் பார்சல்கள் ரூபா 25/- மட்டுமே.

19/3 கொழும்புத்துறைசாலை, சுண்டிக்குளி. 04016

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 15 | 03 | 1953



விண்ணில்: 08 | 03 | 1991

## அமரர் யக்கோமுத்து மரியதாஸ் (செல்வம்)

பண்பான கணவனாய்
மூன்று பிள்ளைகளின் அன்புத்தந்தையாய்
பெற்றோருக்கு மூத்த புதல்வனாய்
அன்பான சகோதரர்களுக்கு பாசம்
நிறைந்த சகோதரனாய் வாழ்ந்து
எங்களைப் பரிதவிக்க விட்டு
நீ நிம்மதியாய் உறங்கிவிட்டாய்
உம் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது

குறிப்பு:- அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை பிற்பகல் 5 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

04042

---

பல்கலைக்கழகம்
இலங்கை

### மருத்துவபீடம் பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகள்

இப் பரீட்சைகள் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன.

1. மருத்துவபீடம் மூன்றாம் ஆண்டு (பகுதி 1 : பகுதி 11) மீள் பரீட்சை.
   = 13 வைகாசி 1991
2. மருத்துவ பீடம் இரண்டாம் ஆண்டு பரீட்சை(1988 அனுமதி)
   =3 யூன் 1991
3. மருத்துவ பீடம் (பகுதி 1) பரீட்சை (1985 அனுமதி
   = 1 யூலை 1991

(1), (2) ற்கான முடிவுத் திகதிகள் 22 04 91 ஆம் (3) ற்கான முடிவுத் திகதிகள் 10. 06 91.

இக்குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

பதிவாளர்

04044

---

தும் மிக அழகான முறையில் (பையின்டிங்) கட்டிக் கொடுக்கப்படும். நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த சலுகையில் வழங்கப் படும். மேலதிக விபரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை 255 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். 04034

---


### தேவை

வளர்ந்து வரும் உணவகத்திற்கு கடின உழைப்பும் சுறுசுறுப்பும் உள்ள பெண் சமையல் உதவியாளர், தோட்ட வேலையாள், பெண் பரிசாரகர் உடனடியாக தேவை: தங்குமிடவசதி, உணவு, சம்பளம், கொடுக்கப்படும். அகதிகள், இடம் பெயர்ந்தோர், மலையகத்தோர் முன்னுரிமை அளிக்கப் படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் ஞாயிறு, திங்கள், செவ்வாய் தினங்களில் மு. ப. 9-00–12-00மணியளவில் நேரில் விண்ணப்பிக்கவும். ஆளணி முகாமையாளர் ''ஜெகித்தாரா'' சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமுன் ஒழுங்கை 19/3 கொழும்புத்துறைச்சாலை.யாழ்ப்பாணம் 04044

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு: 31 – 08 – 1923



விண்ணில் அமர்வு: 19 – 03 – 1990

## அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி அபர பக்க அட்டமி: 07 - 04 - 1991

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே, ஆறாத உங்கள் பிரிவு உள்ளம் உருகிட என்றும் வடவரணி சூரிய கலுக்காய்ச் சித்தி விநாயகன் கழல் நிழல் உறைந்திட உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வரணி வடக்கு,
வரணி.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

04032

# மாவட்டந்தோறும் ஒவ்வொரு பல்கலைக்கழகம்;

## மாகாண பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக அமைக்கப்படவுள்ளன

மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் இருபத்தைந்து மாவட்டங்களும் இருபத்தைந்து பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேசமாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஒன்பது மாகாண பல்கலைக் கழகங்களுக்கும் மேலதிகமாகவேஇந்த இருபத்தைந்து மாவட்ட பல்கலைக்கழகங்களும் அமைக்கப்படவுள்ளன.

அடுத்த நான்கு வருடங்களுக்குள் இந்த மாவட்ட பல்கலைக்கழகங்கள் இயங்க ஆரம்பிக்கும்,

## கேரதீவு புதர்க்காடு தினமும் அழிப்பு;

## மண் அரிப்பு ஏற்பட்டு கடல்பெருகும் அபாயம்

கேரதீவுக் கடற்கரைப் பகுதியை அண்டியுள்ள புதர்கள் நிறைந்த காடுகளில் உள்ள மரங்கள் பெருமளவில் தினமும் வெட்டப்பட்டு அவை அழிக்கப்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக மண் அரிப்பு ஏற்பட்டுக் கடல்நீர் உட்புகும் ஆபத்து உருவாகியுள்ளது

எனவே காடுகளை வெட்டுவதை உடனடியாக நிறுத்தி ஏற்படக் கூடிய ஆபத்தில் இருந்து தடுக்க முன்வருமாறு கேரதீவு வாழ்மக்களைத் தனைக்கிளப்பு இளைஞர் மறுமலர்ச்சிக்கழகம் கோரியுள்ளது. (16)

## கிழக்குப் பல்கலைக்கழகம் மீண்டும் வந்தாறுமூலைக்கு இடமாற்றம்

கிழக்குப் பல்கலைக் கழகம் மீண்டும் வந்தாறுமூலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துப் பழைய மாணவர்களுக்கான செய்முறை வகுப்புக்கள் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

கடந்த ஜூன் மாதம் கலவரங்கள் ஆரம்பமானதையடுத்துக் கிழக்குப் பல்கலைக் கழகம் மட்டக்களப்புக்குத் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருந்தது.

## எள்ளுச் செய்கை பெருமளவு அதிகரிப்பு

## நல்லெண்ணெய் விலை விரைவில் குறையும்

வலிகாமம் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எள்ளுச் செய்கை அதிக விளைச்சலை கொடுத்துள்ளது.

சிறு தானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவிர பிரசாரத்தை அடுத்து சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளில் தரிசு நிலங்களில் எள்ளுச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போது நல்ல விளைச்சலை கொடுத்துள்ள இந்த எள்ளுச் செய்கை அறுவடைக்கு தயாராகவுள்ளது. எள்ளு உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில் நல்லெண்ணெயின் விலை வீழ்ச்சி அடையலாமென்று கருதது தெரிவிக்கப்படுகிறது. (13)

## யாழ் வைத்தியபீட பட்டதாரிகளுக்கு

## குடாநாட்டு வைத்தியசாலைகளில் நியமனம்

கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளிற்கு புதிய வைத்தியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றவர்கள் இப்பகுதி வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு புதிதாக நியமிக்கப்படுவார்கள் எனவும் இதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கு பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

## விஞ்ஞான மாணவனுக்கு புலமைப் பரிசில்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் 12 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் வயாவிளானைச் சேர்ந்தவேலுப்பிள்ளை ஸ்ரீகண்ணதாசனுக்கு இப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கத் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாதாந்தம் 200 ரூபாவைப் புலமைப் பரிசிலாக வழங்க முன்வந்துள்ளது.

1989 க.பொ.த சாதாரண பரீட்சையில் இம்மாணவர் 5 அதிதிறமைச் சித்திகளையும், 3 திறமைச் சித்திகளையும் பெற்றிருந்தார். தாய் தந்தையர் அற்ற வறிய மாணவரான ஸ்ரீகண்ணதாசனின் மூத்த சகோதரர் மாவீரர் ஆனார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவுப் பகுதியில் கடற்படை சூடு!

கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தோர் மீது இலங்கை கடற்படையினர் சுட்டதில் மூவர் படுகாயமுற்றதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் நடந்துள்ளது.

படுகாயமடைந்த மூவரும் இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற அகதிகளெனவும் இவர்கள் நாகர் கோவிலில் தங்கியிருந்து சிவியப்பாட்டுக்காக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழகத்தில் வெடிகுண்டு புரளி

## பேருந்துகளைச் சோதனையிட பணிப்பு

தமிழ் நாட்டில் எந்நேரமும் வெடிகுண்டுகள் வெடிக்கலாமெனவும் அதகுறித்து முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறும் தமிழக அரசு மக்களை எச்சரித்துள்ளது.

குறிப்பாக பேருந்துகளில் வெடிகுண்டுகள் வைக்கப்படலாமெனவும் பேருந்துகள் புறப்படுவதற்கு முன்னரும், குறித்த இடத்தை சென்றடைந்த பின்னரும் சகல பேருந்துகளும் முழுமையாக சோதனையிடப் படவேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## யுத்தத்தில் அங்கவீனமான படையினருக்கு ராகமவில் பராமரிப்பு நிலையம்

வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளுடனான மோதலில் அங்கவீனமான படையினருக்கென ராகமவில் ஒரு பராமரிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் அங்கவீனமான படையினர் அரசின் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு 'சிங்கள மகாஜன பெரமுன' அமைப்பினர் பௌத்தபிக்கு ஒருவர் தலைமையில் இந்த நிலையத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சிப்பாய்களுக்கு உடுபிடவைகளையும், உணவுப் பொருட்களையும் வழங்கியுள்ளனர்.

## இணையம் உதவும்

## சுருட்டுத் தொழிலாளர் சம்பளம்;

## குறைத்து வழங்கினால் நடவடிக்கை

தேர்தலை முன்னிட்டுப் பதினொரு எதிர்க்கட்சிகளினால் உருவாக்கப்பட்ட கூட்டணியை அ. திலக சிறி சண்டே ஒப்சேவரில் (24. 3. 91) விமர்சித்துள்ளார். சிலவற்றை எமது வாசகர்களுக்குத்தருகின்றோம்.

## கொள்கைகளற்ற எதிர்க்கட்சிக் கூட்டணி!

தேர்தல் வருவதற்குமுன் எதிர்க்கட்சிகள் பல ஒன்றாக இணைவது வழக்கம், சென்ற பெப்ரவரி 21 இல் பதினொரு எதிர்க்கட்சிகள் கொழும்பில் இணைந்து கூட்டம் நடத்தின.

பல கட்சிகள் ஒன்றாக இணையும் போது, அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் ஒருபொது வேலைத் திட்டத்தின் கீழ் இணைதல் வேண்டும்.

ஆனால், அன்று கூடியகட்சிகளிடையே, எவ்வித அரசியல் கொள்கை அடிப்படை இணக்கமும் இருக்கவில்லை. எந்த ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் அவர்கள் கூடவில்லை.

ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தை எதிர்ப்பதுதான் அக்கட்சிகளின் ஒரேபொது குறிக்கோளாக இருந்தது.

### கட்சிகளின் நிலைமை

அன்று கூடிய பதினொரு கட்சிகளில் முக்கியமான எதிர்க்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும். மற்றக்கட்சிகள் யாவும் மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்குப் பெறாத சிறு, சிறு கட்சிகளே இந்தச் சிறு கட்சிகள், சுதந்திரக் கட்சியிலிருந்தும், சமசமாஜக் கட்சியிலிருந்தும் பிரிந்து உருவாகிய உதிரிகள். இப்பதினொரு கட்சிகளில் இரண்டு தமிழ்க் கட்சிகளும் அடங்குகின்றன அவை ரியூலோ எவ், ஈ பி.ஆர்.எல்.எவ் ஆகியவை யாதும்.

இப்பதினொரு கட்சிகளின் கூட்டுப் பற்றிக் கருத்துத் தெரிவித்த அநுரா பண்டாரநாயக்கா "சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் மக்கள் செல்வாக்கையிழந்த முக்கியமற்ற கட்சிகள்" எனக் கூறினர்.

இந்த இரண்டு கட்சிகளுமே இந்தக் கூட்டணியில் பெரிய கட்சிகள். இக்கட்சிகளின் நிலை இவ்வாறாயின், மற்ற உதிரிகளின் நிலையை நாம் ஊகித்துணரலாம்.

### அநுரா கருத்து

மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாத இந்த உதிரிக் கட்சிகள் சுதந்திரக்கட்சியின் தலைமையில் கூட்டணி அமைப்பதற்கு முன்வந்ததைப் பற்றிக் குறிப்பிட்ட அநுரா பண்டாரநாயக்கா "சுதந்திரக்கட்சி ஒரு நலன்புரிச்சங்கமல்ல. மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப்பெற்ற கட்சி. இந்தக் கூட்டணியில் சேர்ந்துள்ள பதினொரு கட்சிகளில் சிலவற்றின் முழு அங்கத்தவர்களையும் முச்சக்கரவண்டியொன்றில் உள்ளடக்கலாம்" எனக் கூறினர்.

### உண்மையும் இதுதான்

அவரின் கூற்றில் உண்மையிருக்கிறது இந்தப் பதினொரு கட்சிக் கூட்டணியில் சுதந்திரக் கட்சியைத் தவிர, மற்றவை வேறு அரசியல் கட்சிகளிலிருந்து பிரிந்து தனித்தனி சிறு கட்சிகளாக உருவாகி, விரக்தியடைந்த நிலையில் உள்ளவை.

பல கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டணி உருவாகமுன் ஒரு பொது வேலைத் திட்டம் முன்வைக்கப்பட்டு, சகல கட்சிகளும் ஆராய்ந்து ஏற்றுக்கொண்ட பின்பே உண்மையான கூட்டணி அமைப்புத் தோன்றுகின்றது அதன் பின்பே அவர்கள் மேடைக்கே வருகிறார்கள். ஆனால் இந்தப் பதினொரு கட்சிக் கூட்டணியில் அப்படி ஒன்றும் நிகழவில்லை. இதன் காரணமாகவே இக் கூட்டணியின் செயற்பாடுகள் மேடைப் பேச்சோடு நின்று விடுகின்றன.

### கொள்கை இல்லை

இந்தக் கூட்டணி அமைத்ததன் நோக்கம் அரசாங்கத்தை எதிர்ப்பதற்காகவெனக்கூறப்படுகிறது ஆனால் அரசாங்கத்தை எதிர்த்துத் தோற்கடித்து வேறு அரசு அமைப்பதே நோக்கமானால் இக் கூட்டணியினரின் கொள்கைகள் தான் என்ன? ஒவ்வொரு கட்சியும் கொள்கைகளைப் பொறுத்தவரை வெவ்வேறு திசையிலல்லவா போய்க் கொண்டிருக்கின்றன.

நாடு எதிர்நோக்கியுள்ள எந்த ஒரு பிரச்சினைக்கும் இந்தப் பதினொரு கட்சிகளிடம் எவ்வித தீர்வும் இல்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

## உதவும்

காரைநகர், சங்கானைப் பகுதிகளில் இருந்து வெளியேறி யாழ் பகுதியில் குடியேறிய மக்களுக்கு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் உணவுப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வார இறுதியில் இப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ப-5)

## குறைத்து வழங்கினால் நடவடிக்கை

சுருட்டுத் தொழிலாளர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட கூலியில் குறைப்பு செய்யக்கூடாதென வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கேட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட 100 சுருட்டுகளுக்கு 15 ரூபா கூலி என்ற நிர்ணயத்தையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும் என வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இதனையும் மீறி குறைந்த சம்பளத்தைப் பெறும் தொழிலாளி மீதும், வழங்கும் முதலாளி மீதும் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் அவர் அண்மையில் சங்கத் தலைவர் உருத்திரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். (74)

## அகில இலங்கை தமிழ் மொழித்தின விழா

## ஜுலை 19 இல் கொழும்பில் நடைபெறும்

பாடசாலைகளுக்கிடையேயான அகில இலங்கை தமிழ் மொழித்தினம் ஜுலை மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது

முன்னர் மே மாதம் 8 ஆம் திகதி இவ் விழாவை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இனிவரும் வருடங்களில் ஆண்டு தோறும் முத்தமிழ் விழா சுவாமி விபுலானந்தரின் நினைவு தினமான ஜுலை 19ஆம் திகதியே நடாத்தப்படவுள்ளது.

ஜுன் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கிடையேயான முத்தமிழ் விழாவுக்கு ஏதுவாக மாவட்ட மாகாண தமிழ்த்தினப் போட்டிகள் மே மாத இறுதிக்குள் நடாத்தி முடிக்கப்படும்,

மாகாண போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு கொழும்பில் நடைபெறவுள்ள தமிழ்த் தின விழாவில் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

## அகதிகளுக்கு மந்துவிலில் வீடுகள்

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து குடியேறிய 14 குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழு மந்துவில் கிராமப் பகுதியில் வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளது.

அக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும், சமையல் பாத்திரங்கள் போன்ற பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. (ப-5)

ஜயபாயவர்களுக்கு உடுபிடவைகளையும், உணவுப் பொருட்களையும் வழங்கியுள்ளனர்.

## திரை நீக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே தமிழ்த்துறைப் பேராசிரியர்களாகப் பணியாற்றி, அமரர்களான பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் க. கைலாசபதி ஆகிய இரு தமிழறிஞர்களதும் உருவப்படங்கள் தமிழ்த் துறையில் 08 ஆம் திகதி காலை 10 மணிக்குத் திரைநீக்கம் செய்துவைக்கப் படவுள்ளன.

## பயிற்சி ஒத்திவைப்பு

இம்மாதம் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவிருந்த தொலைக் கல்வி பயிற்சி ஆசிரியர்களுக்கான ஐந்துநாள் தொடர்புறு வகுப்புகள் யாவும் இம் மாதம் 15ஆந் திகதி முதல் 19ஆந் திகதி வரை பின் போடப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார்

மேற்படி வகுப்புகள் யாவும் வழமைபோல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது, (ப-5)

பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கூட்டணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தையோ அல்லது இந்த எதிர்கட்சிக் கூட்டணியையோ மக்கள் முக்கியமான அரசியல் திருப்பமாகவோ, அரசியல்நிகழ்வாகவோ கருத்தில் கொள்ளவில்லை,

இதற்கான காரணங்களையாவது எதிர்க்கட்சியினர் தெரிந்து கொள்ளாதது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்,

தமிழில். வி. பி.

## மெய்யியற் கழக கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக மெய்யியற் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சுயாதீன சிந்தனையும், சைவ சித்தாந்தமும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குப் பல்கலைக்கழகத் தொல் பொருளியல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி நா. ஞானக்குமரர் இவ்விடயம் சம்பந்தமாக உரையாற்றுவார்' இந்து நாகரிகத் துறைத் தலைவரான கலாநிதி ப கோபாலகிருஷ்ணன் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை மெய்யியற் கழகத்தலைவர் ஏ யூட் அஞ்சலோ செய்துள்ளார்.

## தவறினால் தண்டனை

கைதடி நாவற்குழிப் பிரதேசத்தில் உள்ள கடைகளில் ஒரு இறாத்தல் பாண் 9 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்தால் அபராதம் விதிக்கப்படும் எனக் கைதடி நாவற்குழிப் பிரதேசப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இதே வேளையில் கடைவாசல்களில் பாணின் விலை எழுதப்பட்ட பட்டியல் தொங்கவிடப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிக்குள் இருக்கும் பேக்கரிகள் 350 இராம் எடையுள்ள பாணை 8 ரூபா 50 சதத்திற்குக் கடைகளுக்கு வழங்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-5)

● விடுவிப்பு நிகழ்ச்சியில் ராஜன்

# நேருக்குநேர் துப்பாக்கியுடன் மோதியவர்களை திருந்தி வாழ சந்தர்ப்பம் கொடுக்கிறோம்

"எமது மண்ணுக்கும் மக்களுக்கும் எதிராக உங்கள் வீரத்தைக்காட்டாது எம்முடன் இணைந்து எதிரிக்கு எதிராக உங்கள் வீரத்தைக் காட்டுங்கள்.

உதவி செய்ய முடியாவிட்டால் உபத்திரவமாவது செய்யாமல் இருக்கவேண்டும். நீங்கள் திருந்தி வாழுவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது".

இவ்வாறு விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இ ராஜன் பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுவிப்பின் போது தெரிவித்தார்.

நேற்றுக்காலை 11.30மணியளவில்கோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகளின் தலைமைக் காரியாலயத்தில் 17 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

எங்களுடன் நேருக்குநேர் துப்பாக்கியுடன் மோதிய சமூக விரோதக் கும்பல் உறுப்பினர்களைக் கூட நாங்கள் அவர்கள் திருந்தி வாழ ஒரு சந்தர்ப்பமாக விடுதலைசெய்துள்ளோம்.

இதே வேளை மாற்று இயக்க அங்கத்தவர்கள் கூட எமது இயக்கத்தில் சில பொறுப்பாளர்களாகவும் உள்ளனர்.

எனவே நீங்கள் சமூகத்தில் திருந்தி வாழ்ந்து எமது மண்ணுக்கும், மக்களுக்கும், எமது போராட்டத்திற்கும் ஏற்றவர்களாக வாழவேண்டும், எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட மாணவர் இயக்கத் தலைவர் மகிலப்பா உரையாற்றுகையில்:

அண்மையில் மன்னார் களுவத்தை தாக்குதலில் முன்னர் ரெலோவில் இருந்து தற்போது எமது இயக்கத்தில் இருக்கும் கப்டன் சூரி என்பவர் வீரசமாக செயற்பட்டு வெற்றி கண்டார்.

அவ்வாறு நீங்களும் எம்முடன் இணைந்து "சரித்திரப் பொன்னேட்டில் சாகாவரம் பெற்றவர்களாக மாறவேண்டும்" எனக் குறிப்பிட்டார். (70)

## பசுபதீஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள்

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய (சிவன்கோவில்) புதிய இராஜகோபுரத்திற்கான வர்ணம் பூசும் வேலைகள் வெகு விரைவில் 2.00.000 ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இராஜகோபுர நிர்மாண வேலைகள் சுமார் 8 00 000 ரூபா செலவில் பூர்த்தியடைந்துள்ளன,

திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவி வழங்க விரும்பும் பக்த அடியார்கள் இராஜ கோபுர திருப்பணிச் சபைப் பொருளாளர் திரு பீ பாலசிங்கத் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர்) திடம் வழங்கலாம் என திருப்பணிச் சபை அறிவித்துள்ளது (15)

## குவைத்தில் இந்தியர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு

வளைகுடா யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட 'குவைத்தை' புனரமைக்கும் பணிகளில் இந்தியர்களுக்கே முதலிடம் அளிக்கப்போவதாக அங்குள்ள அமெரிக்க நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

இதேபோல மேற்கு நாட்டு நிறுவனங்களும் இந்தியர்களையே அதிகமாகத்திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரபு நாடுகள் இந்தியர்களையே அதிகமாக விரும்புவதாகவும் நாடு திரும்பிய இந்தியர்கள் வரவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது (33)

## 50 நோயாளிகள் கொழும்புக்கு

பதிவு செய்யப்பட்ட கடும் நோயாளிகள் இன்று கொழும்பு செல்கின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்

...

கொழும்பு...

அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பருத்தித்துறை நகரில் சுகாதார வார நிகழ்ச்சிகள்

பருத்தித்துறை நகராளுமன்றத்தின் சுகாதார வாரம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு நடைபெறுமென நகராளுமன்றச் செயலாளர் கே சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இச்சுகாதார வார நிகழ்ச்சிகளின் போது நகரத்தைச் சிரமதானமுறையில் சுத்திகரித்து சுகாதாரத்தைப் பேணுதல், பொதுக்கிணறுகளைச் சுத்தப்படுத்தல், கிணறுகளுக்கு குளோரீன் இடல், மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் கட்டாக்காலி நாய்களுக்கு நஞ்சூட்டி அழித்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாதம் 15 ஆம் திகதி இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள், பொது சேவை நிறுவனங்கள், அரச ஊழியர்கள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து பல்வேறு வகையான சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனரென்றும் செயலாளர் தெரிவித்துள்ளார். (16)

## சனசமூக நிலையங்களின் சமாசம் தாபரிப்பு நிதி வழங்கும்

தந்தையை இழந்த பிள்ளைகளுக்காக யாழ் மாநகர சனசமூகநிலையங்களின் சமாசத்தின் தாபரிப்பு நிதி 10 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாக வழங்கப்படாமலிருந்த நிலுவைகளும் இம்மாத நிதியுடன் சேர்த்து வழங்கப்படும்.

இல. 33, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சமாசத்தின் பணிமனையில் இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கு மேலும் பல விண்ணப்பங்கள் கிடைத்துள்ள போதும், அவை தற்போது பரிசீலனை செய்யப்படுவதாகவும், தகுதியான பிள்ளைகளுக்கு இக்கொடுப்பனவு கிடைக்கவிருப்பதாகவும் சமாசத்தின் தலைவர் தெரிவிக்கின்றார். 47

## நோயுள்ள கால்நடைகள் இறைச்சிக்கு விற்பனை

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆடு, மாடு இறைச்சிக்கடைகளில் தரம் கெட்ட இறைச்சி விற்கப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ இறைச்சி விலை நிர்ணயிக்கப்பட்டும் சில கடைகளில் கூடுதலாக அறவிடுவதாகவும் சில கடைகளில் (நிறைகுறைவாக) தராசு கீழே பதிய இறைச்சி எடுக்கப்பட்டு உடதாசியில் சுற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கிளிநொச்சி வடமராட்சி நடைகளை இறைச்சிக்காக விற்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம் இறைச்சி வெட்டப்படும்போது சுகாதாரப்பகுதியினர் கண்காணித்து சீல் வைத்த அடையாளங்கள் இருப்பதில்லை எனவும் பாவனையாளர் தெரிவிக்கின்றனர். (74)

## வயோதிபர் தற்கொலை

வாழ்க்கையில் விரக்தியுற்ற தாத்தா ஒருவர் மரத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இப்பகுதியான

...

மலையகத் தமிழரிடம்

## அடையாள அட்டை பெற 24 ஆயிரம் ரூபா மோசடி

மலையகத்தமிழ் மக்களிடமும் அடையாள அட்டை பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்டத்தில் உள்ள கொவிலந்தை என்ற தோட்டப்பகுதியில் எண்ணூறு பேரிடம் புகைப்படம் எடுத்து விண்ணப்பிக்க ஆளுக்கு 30 ரூபா என்று கேட்டு 24 ஆயிரம் ரூபாவை ஒருவர் வாங்கினாராம்,

ஓய்வுபெற்றகிராமசேகரும் அவரது நண்பருமாக இதனைச் செய்ததாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு புதிய பிரெஞ்வைத்தியக்குழு

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு புதிய பிரெஞ் வைத்தியக்குழு ஒன்று வந்துள்ளது.

தற்போதுள்ள குழு நாடு திரும்புவதால் இப் புதியவர்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரான்சின் தேசத்தின் எல்லைக்கு அப்பால் பணிபுரியும் வைத்திய சேவைக்குழுவின் இலங்கைத் தலைவரான திரு. ஒலிவர் றெனோ தாயகம்செல்கிறார். இவரது இடத்துக்கு செல்வி ஆன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரெஞ் வைத்தியக்குழு வடக்கே மந்திகை, மன்னார் ஆஸ்பத்திரிகளிலும் கிழக்கே மட்டக்களப்பு, திருகோணமலை ஆஸ்பத்திரிகளிலும் சேவையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (74)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு மலையகத்தில் பிரசாரம்

மலையகத்தில் தோட்டத் தொழிலாளரின் வாக்குகளை உள்ளூராட்சித் தேர்தலில் பெறுவதில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கட்சியினரும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மலையகமக்களுக்கு எதிராகப் பேசிவந்த சில எதிர்க்கட்சியினர் இப்போது அவர்களுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனராம்.

சில இடங்களில் கல் வீச்சு போன்ற சம்பவங்கள் இடம் பெற்றதாக பொலிஸ் செய்திகள் கூறுகின்றன. (74)

## செலாவணிக் கட்டுப்பாடு மேலும் தளர்த்தப்பட்டுள்ளது

இலங்கையில் வைப்பில் இடப்பட்டு முடக்கி வைக்கப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட தமது பணத்தின் முழுத் தொகையையும் அந்நிய நாட்டுக்கம்பனிகளோ, வெளிநாட்டவரோ நாட்டிற்கு வெளியே எடுத்துச்செல்வதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

ஒய்வூதியங்கள், விற்பனை, பங்கு இலாபங்கள், சொத்துக்கள் மூலமான வருமானங்கள் ஆகியவற்றை முழு அளவில் எடுத்துச்செல்ல முடியாதவாறு இதுவரை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு தடைசெய்திருந்தது.

ஆனால் இந்த தடை நீக்கத்தால வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர்கள் மற்றும் நாட்டை விட்டுச்சென்றவர்களின் இடைநிறுத்திவைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு இச்சலுகை கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## ஓட்டுமடம் சந்தியில் விபத்து இளைஞர் பலியானார்

நேற்று மாலை ஓட்டுமடம் சந்தியில் நடைபெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்த மு. சந்திரகுமார் (22) சம்...

நோயாளிகள் இன்று கொழும்பு செல்கின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 50 நோயாளிகள் இம்முறை கொழும்பு செல்கின்றனர்.

இன்று கொழும்பு செல்லும் 'குமண' கப்பலில் இவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதேவேளை 'குமண' கப்பலில் குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்களும் எடுத்துச் செல்லப்படும். (70)

## வடகிழக்கு—

கொள்ளுப்பிட்டியில் இந்திய இலங்கை நட்புறவு சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் தெரிவித்தார்.

பெருமளவிலான தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக செல்கின்றனர் இதனால் அவர்களை பராமரிக்க இந்தியா பணத்தை செலவிட வேண்டிய நிலை உள்ளது இதைத்தவிர தமிழ்நாட்டிலும் தீவிரவாதம் பரவும் ஆபத்து தோன்றுகிறது. இவற்றை காரணம் காட்டி இந்தியா இலங்கை மீது அக்கறை காட்டத் தொடங்கி விட்டது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கிளிநொச்சி வடமராட்சி பகுதியில் கால்வாய் நோய் பரவுவதாக கால்நடை வைத்தியப் பகுதி அறிவித்துள்ளது இவர் இந்த நோயுள்ள கால்

## வவுனியா...

தென்மேற்காக பம்பைமடு பகுதியில் நடைபெற்ற மோதலின் போதே இவ்விழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வழக்கம்பரையில்...

பிரிவிலே தங்கியுள்ள அகதிகளுக்கு காரைநகர் ப.நோ.கூ.ச வழக்கம்பரையில் தற்காலிக கிளை யொன்றினை அமைத்து நிவாரணப் பொருள்களை வழங்கி வருகிறது (ப 11)

## கடற்படை—

5 ஆம் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இம்முகாம்மீது புலிகள் நடாத்திய ஷெல் தாக்குதலினால் ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அந்நியச் செலவாணி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. (33)

## யாழ்மாவட்ட...

பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையே அகதிகளுக்கு வழங்கினோம்'' என கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை கடந்த ஒன்பது மாதங்களாக கூட்டுறவுக் கிராமிய வங்கிகளால் ஒய்வூதியம் வழங்கியதால் மட்டும் பதினொரு கோடி ரூபா பண முடக்கம் ஏற்பட்டுள்ளது எனவும் அதற்கு இரண்டு கோடி ரூபாவே கிடைத்தது எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

யாழ் செயலகத்தினால் இச்சங்கங்களுக்கு வழங்கப்படும் காசோலைகள் வங்கிகளில் கணக்கில் இடப்படுகிறதே தவிர பணமாக மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பணம் கிடைத்தாலே வெளியிடங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்று அவர் மேலும் சொன்னார். (66)

தாத்தா ஒருவர் மரத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இப்படியான விபரீத ஆசைக்கு உட்பட்டவர் சாட்டி என்னும் இடத்தைச் சேர்ந்த சின்னையா கதிரவேலு 90, என்பவராவர் இவர் வாழ்க்கையில் விரக்தியுற்று மன அமைதியின்றி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (24)

## பாடசாலையில் நூலகம்

பற்றளை மகாவித்தியாலயத்தில் மணவர்களின் கல்வி அபிவிருத்தி கருதி மாணவர்களுக்கான நூலகம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

இந்த நூலகத்திற்குப் பல் வேறுவகையான நூல்களை அன்பளிப்புச் செயவதற்குப் பல நலன் விரும்பிகள் முன் வந்துள்ளனர்.

இதனை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகளை வித்தியாலய அதிபர் திரு எஸ் யோகராமேற்கொண்டு வருகிறார். (15)

## செஞ்சிலுவையின்...

சங்க யாழ் பிரிவின் நிவாரண செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் இவர் நேரடியாக பார்வையிட்டார். (70)

நேற்று மாலை ஒட்டுமடம் சந்தியில் நடைபெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்

ஒட்டுமடம் சந்தியில் லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்த மு. சந்திரகுமார் (22) சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை மோதிய லொறி நிற்காமல் ஓடிவிட்டது. (74)

# சைக்கிள் திருடன் அகப்பட்டான்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சுற்றாடலில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுதொடர்பாக புலோலி கிழக்கு உத்திராவத்தையைச் சேர்ந்த கே இராசலிங்கம் என்பவர் விடுதலைப்புலிகள் புலோலி பிரதேசசபை அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்,

இவ்வைத்திய சாலை சுற்றாடலில் அல்வாயைச் சேர்ந்த மோகன் என்பவர் தமது சைக்கிளை விட்டு விட்டு வைத்தியசாலைக்குச் சென்று திரும்பியபோது சைக்கிளைக் காணாது திகைத்து அங்கு நின்றோர்களிடம் விசாரித்தபோது வைத்திய சாலை வளவுக்குள் நடமாடும் ஒருவர் சைக்கிளைக் கொண்டு சென்றதைக் கண்டதாக தெரிவித்தனர்.

உடனடியாக குறிப்பிட்ட நபரின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு (மோகனின்) சைக்கிள் நிற்கக் காணப்பட்டதாம். 50

## புங்குடுதீவில்—

கினால் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## கொழும்பு பயணம்...

பமானது.

கடந்த இரண்டாம் திகதிக்குப்பின்னர் நேற்று கொழும்பு போக்குவரத்து மீண்டும் ஆரம்பமானது. (70)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 07-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.